மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருச்சுழி.

**அசல் வழக்கு எண். 39/2024**

வாதி/பிரதிவாதி சாட்சியின் வாக்குமூலம் (1873ம் ஆண்டு சாட்சியச்சட்டம் 44வது பிரிவு 5ஆவது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.கலைச்செல்வி, கிரேடு 3 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : பால்சாமி ( கிராம நிர்வாக அலுவலர் ) (வா.சா.3)<br>த/பெ.க/பெ :<br>கிராமம் :<br>தாலுகா : | சாதி :<br>மதம் :<br>தொழில் :<br>வயது : |

23.09.2025

**முதல் விசாரணை –**

1. நான் கண்டுகொண்டான்மாணிக்கம் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வருகிறேன். அழைப்பாணையின்பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். அழைப்பாணையில் குறிப்பிட்டு ஆவணங்களை கொண்டு வந்துள்ளேன். திருச்சுழி வட்டம், கண்டுகொண்டான்மாணிக்கம் சர்வே எண்.59 க்குரிய புல வரைபடம் கொண்டு வந்துள்ளேன். சர்வே எண்.59 க்குரிய புல வரைபடம் **சாசாஆ 2** ஆகும். சர்வே எண்.59 க்குரிய பட்டா மற்றும் சிட்டா கொண்டு வந்துள்ளேன். அது **சாசாஆ 3** ஆகும். சர்வே எண்.59 உட்பிரிவாகி 59/8 ஏ–வில் 0.05.5 சிக்கந்தர் ராவுத்தர் மனைவி ஜமால்பீவி பெயரில் உள்ளது. சர்வே எண். 59/8 பி சுப்பிரமணியன் மனைவி லீனா பெயரில் உள்ளது.

2. சர்வே எண்.59/8 க்குரிய நான்குமால் வடக்கு மாநில நெடுஞ்சாலை, கிழக்கு சிங்கம்புலி புஞ்சை, மேற்கே அப்துல்கனி, இப்ராஹிம், ராமன், மலைகனி ஆகியோரது புஞ்சை, தெற்கே ஜமால்முகம்மது புஞ்சை நிலம் உள்ளது. சர்வே எண். 59/8 ஏ–க்குரிய நான்குமால் என்னவென்றால் 59/8 பி வடக்கு மாநில நெடுஞ்சாலை திருச்சுழி செல்லும் ரோடு உள்ளது, மேற்கே 59/8 ஏ ஜமால்பீவி இடம் உள்ளது, கிழக்கே லீனா, தெற்கே ஜமால்முகம்மது புஞ்சை நிலம் உள்ளது. மேற்படி 59/8ல் 1990 முதல் 1993 வரையிலான ஆவணங்கள் கொண்டு

வந்துள்ளேன். 1990, 1991, 1992ம் ஆண்டு கருப்பணன் வகையறா சாகுபடி செய்ததாக ஆவணம் உள்ளது. 2011முதல் 2025ம் வருடத்திற்கான ஆவணங்கள் கொண்டு வந்துள்ளேன். 2016, 2017 ம் வருடத்தில் மட்டும் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆண்டுகளுக்கான பசலி ஆவணம் (17 எண்ணம்) **சாசாஆ 4** ஆகும்.

**குறுக்கு விசாரணை –**

1. சர்வே எண். 59/8ன் மொத்தம் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 0.10.5 ஹெக்டேர் ஆகும். சர்வே எண். 59/8 ஆதியில் யாருடைய பெயரில் உள்ளது என்றால் கருப்பன், வேல்முருகன், மைனர் பூசாரி அவரது காப்பாளர் தாயார் பாப்பம்மாள் பெயரில் இருந்தது. சர்வே எண். 59/8 எப்போது 59/8/ஏ, 59/8பி என்று உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் 2017ம் ஆண்டு உட்பிரிவு செய்யப்பட்டது. பட்டா மாறுதல் உத்தரவு என்ன என்றால் எந்த உத்தரவின் அடிப்படையாக கொண்டு 59/8 உட்பிரிவு செய்யப்பட்டது என்று எங்களது வருவாய் ஆவணத்தில் இல்லை. சர்வே எண். 59/8 கருப்பன், வேல்முருகன், மைனர் பூசாரி அவரது காப்பாளர் தாயார் பாப்பம்மாள் அவர்களது பெயரில் இருந்து யார் பெயருக்கு எவ்வாறு பட்டா மாறுதல் ஆகியுள்ளது என்றால் கடந்த 15.06.2011ம் தேதியில் TPTNo.678/2011ன் படி ஒடுங்கன் மகன் பெரியாம்பிள்ளை பெயருக்கு மாற்றப்பட்டுள்ளதாக உள்ளது. 2017ம் வருடம் உத்தரவு எதுவும் குறிப்பிடப்படவில்லை சர்வே எண்.59/8ஆனது உட்பிரிவு செய்யப்பட்டு சர்வே எண்.59/8ஏ ஜமால்பீவி பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. சர்வே எண். 59/8பி லீனா பெயருக்கு மாற்றப்பட்டதற்கு உத்தரவு குறிப்புகள் உள்ளதா என்றால் இல்லை. பொதுவாக பட்டா மாற்றம் செய்யப்படும்போது எந்த உத்தரவின் அடிப்படையில் மாற்றப்படுகிறது என்று ஆவணங்களில் குறிப்பு எழுதப்படும் என்றால் சரிதான்.

2. சர்வே எண்.59/3 யார் பெயரில் உள்ளது என்றால் ஜமால்பீவி பெயரில் 0.05.5 ஹெக்டேர் உள்ளது. மேற்படி பட்டா அதற்கு முன்பு யார் பெயரில் உள்ளது என்றால் சர்வே எண்.59/3 ஆனது ஜமால்பீவி பெயருக்கு வருவதற்கு முன்பு

பட்டா எண். 152 ன்படி ஒடுங்கன் மகன் பெரியாம்பிள்ளை பெயரில் இருந்து வந்தது. சர்வே எண்.59/8 ல் பட்டா எண்.469 சுப்பிரமணி மனைவி லீனா பெயரில் உள்ளது. சுப்பிரமணி மனைவி லீனா பெயரில் பட்டா எப்போது மாற்றப்பட்டுள்ளது என்றால் 15.06.2011 ம் தேதி உத்தரவு எண்.TPT No.678/2011 ன்படி மாற்றப்பட்டது. சர்வே எண்.59/8 ஆனது 2011 ம் ஆண்டுக்கு பின்னர் பெயர் மாற்றம் மற்றும் உட்பிரிவு செய்யப்பட்டதற்கான உத்தரவு மற்றும் கோப்புகள் எங்களது அலுவலகத்தில் இல்லை. ஒடுங்கன் மகன் பெரியாம்பிள்ளைக்கு கண்டுகொண்டான்மாணிக்கத்தில் சர்வே எண்.59/3 ல் உள்ள பட்டாதாரர் பெரியாம்பிள்ளைக்கு சர்வே எண்.59/3 சொத்துக்களை தவிர 2009 க்கு முன்பாக சர்வே எண்.59 ல் வேறு சொத்திற்கு அவரது பெயரில் பட்டா எதுவும் இல்லை என்றால் சரிதான்.

3. பட்டா எண்.398 ஆனது சர்வே எண்.59/8 ற்கு 2011 ல் ஒடுங்கன் மகன் பெரியாம்பிள்ளை பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண். 59/3 மொத்த விஸ்தீரணத்திற்கு நான்குமால் தெற்கே திருச்சுழி – நரிக்குடி நெடுஞ்சாலை, மேற்கே முருகேசபாண்டியன் புஞ்சை நிலம், கிழக்கே பாலசுப்பிரமணி நிலம், வடக்கே அர்ச்சுணன் வகையறா புஞ்சை நிலம் உள்ளது. சர்வே எண். 59/8 ஏ ஜமால்பீவி பெயரில் வீடு உள்ளதாக புல வரைபடத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

**மறு விசாரணை –**

இல்லை.